இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1286 ஆம் இலக்கம் - 2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

பதவிகள்-வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்

திருத்தம்

பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் வைத்தியப் பதிவாளர் பதவி (தமிழ் மொழிமூலம்) - கொழும்பு மாவட்டம்

2003.01.24 ஆந் திகதிய 1273 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிஷக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் இற் கோரப்பட்டுள்ள கொழும்பு மாவட்டத்தின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற வைத்தியப் பதிவாளர் பதவி (தமிழ் மொழிமூலம்)க்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2003.04.28 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு 03.
2003,ஏப்பிறல் 07.

4-688

இலங்கை புகையிரத திணைக்களம்

உப புகையிரத நிலைய அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரிய அறிவித்தலில் மாற்றம் செய்தல்

உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக் கொள்வதற்காக, உடன் 2003.03.14 ஆந் திகதிய 1280 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 1 ஆம் பந்தியின் உப இலக்கம் 6ஐ உடைய ஹொரபே உப புகையிரத நிலையத்தினதும் உப இலக்கம் 11 ஐ உடைய வயிக்கால உப புகையிரத நிலையத்தினதும் வெற்றிடங்களை நிரப்பாமலிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி அந்த நிலையங்கள் இரண்டையும் குறிப்பிட்ட அறிவித்தலிலிருந்து நீக்கப்பட்டுள்ள தென்பதை அறியத்தருகிறேன். அந்நிலையங்களுக்காக தற்போது விண்ணப்பங்கள் அனுப்பிய விண்ணப்பதாரிகள் அவ் அறிவித்தலில் உள்ள வேறு நிலையங்களுக்கு விண்ணப்பிக்க அவசிய தகுதிகளை பெற்றிருந்தால் அவர்களின் விருப்பத்தை எழுத்து மூலம் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் சம்பந்தமாக நிலைமையை தெளிவுபடுத்தும் வகையில் எழுத்துமூலம் அறியத்தரப்படும்.

பிறியால் த சில்வா,
புகையிரத முகாமையாளர்.

4-715

பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமகாண் தடைப் பரீட்சை - 2002

திட்டச் செற்படுத்துகை அமைச்சின் அபிவிருத்தி அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 2001 ஆம் ஆண்டு மே மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படுமெனவும், இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2003 மே மாதம் 09 எனவும், அவர்கள் வருடாந்தம் ரூபா 78,840 சம்பள அளவுத்திட்டத்தை அடைவதற்கு முன் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

2. **பரீட்சைத் திட்டம்** .-கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அமைந்திருக்கும்:-

(I) நிதிப் பிரமாணங்கள் /அலுவலக முறைமைகள் (2 மணித்தியாலங்கள்)

(II) ஆங்கில மொழி (1 மணி 30 நிமிடங்கள்)

குறிப்பு.- (அ) ஓர் உத்தியோகத்தர், தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவையில் சகல பாடங்களுக்கும் தோற்ற முடியும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி, சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ பெற்றிருக்க வேண்டும்.

3. **பாடங்கள் :**

(I) நிதிப் பிரமாணங்கள் /அலுவலக முறைமைகள் (2 மணித்தியாலங்கள்) :

(i) இலங்கையின் அரசாங்க முகாமைத்துவக் கட்டமைப்பு

(ii) நிதி முகாமைத்துவமும் வருடாந்த மதிப்பீடுகளும்

(iii) தாபனக்கோவையின் கட்டளைகளும் நிதிப் பிரமாணங்களும்
தாபனக் கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் உள்ளடக்கப்படும் :-
I, II,IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII
அரசாங்க நிதிப் பிரமாணங்களின் 1வது பாகம் (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த)

(II) ஆங்கில மொழி (1 மணி 30 நிமிடங்கள்)

அபிவிருத்தி அலுவலர்கள் தங்களது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான ஆங்கில அறிவைப் பரிசோதிக்கும் விதத்தில் இந்த வினாத்தாள் வடிவமைக்கப்படும். க. பொ. த. (சாதாரண தர) வினாத்தாள்களுக்குச் சமமான விதத்திலும், மொழி அறிவு, கட்டுரை எழுதுதல், சுருக்கி எழுதுதல், இலக்கணம், கிரகித்தல் என்பன உள்ளடக்கிய விதத்திலும் இந்த வினாத்தாள் அமைந்திருக்கும்.

4. **தகைமைகள்**.- இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திட்டச் செற்படுத்துகை அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தகுதியுடையவராவார்கள்.

5. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதி யில் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம். ஒரு A4 அளவு தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் 01 இல் இருந்து 07 வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும், 08இல் இருந்து மிகுதி விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும் வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும், இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 07, பெலவத்தை, பத்தமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2003 மே மாதம் 09 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பரீட்சையின் பெயர்" குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) பொருத்தமான வடிவமைப்புக்கு அப்பாற்பட்டதும், எல்லா தகவல்களையும் கொண்டிராததும், பிந்தி வந்ததைகின்றது மான விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அஞ்சலில் தொலைந்த தாகவோ, தாமதித்ததாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூரிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது 04 நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையைப் பெறாவிடின், அவர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு உடன் காலதாமதமின்றி தொடர்புகொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தொடர்புகொள்ளும்போது பின்வரும் தகவல்களையும் அறிவித்தல் வேண்டும்:-

(i) பரீட்சையின் பெயர்;

(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(iii) முழு அஞ்சல் முகவரி;

(iv) விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதி ;

(v) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி.

7. **ஆளடையாள அட்டை**.-பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் (ஒவ்வொரு பாடத்தின்போதும்) மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு ;

(ஆ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை

மேற்குறிப்பிட்டவற்றில் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் பரீட்சார்த்தி நிலை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணின்பேரில் நிராகரிக்கப்படுவதற்கு அவர் அதிகாரம் கொண்டிருப்பார்.

8. **பரீட்சைக் கட்டணம்** .-பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி களிடமிருந்து பின்வரும் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது:-

பரீட்சைக் கட்டணம்	ரூபா சதம்
(அ) முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் கட்டணம் செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளனர்.	
(ஆ) அதன் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப் பரீட்சைக்கு	-115.00
(இ) ஒரு பாடத்திற்கு	- 75.00

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-0-20-13 வருமான தலைப்பிற்கு வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் நன்றாக ஒட்டி விடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திணைக்களத்தை/நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குக் கடமை விடுதலை வழங்குமாறு திணைக்கள/நிறுவனத் தலைவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

10. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இந்த அமைச்சின் தற்றுணிபின்படி முடிவு செய்யப்படும்.

ஜே. சரித ரத்வத்தை,
செயலாளர்,
கொள்கை அபிவிருத்தி
செயற்படுத்துகை அமைச்சு

கொள்கை அபிவிருத்தி செயற்படுத்துகை அமைச்சு,
இலங்கை மத்திய வங்கிக் கட்டிடம்,
இல. 30, ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

திட்ட செயற்படுத்துகை அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2002

(**குறிப்பு**.- இவ்விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்)

சுட்டிலக்கம் [ ]

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

1. (i) முதலெழுத்துக்களுடன் சொந்தப் பெயர் :-----.
   (ii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (பெரிய எழுத்துக்களில்):-----.
2. (i) அலுவலக முகவரி :-----.
   (ii) இணைக்கப்பட்டுள்ள அமைச்சு :-----.
3. பிறந்த திகதி :-
   ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
4. அபிவிருத்தி அலுவலராகக் கடமையேற்ற திகதி :-----.
   (கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக)
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
5. நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழிமூலம் :-----.
6. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் விண்ணப்பிக்கும் பாடங்கள் :-
   (i) :-----.
   (ii) :-----.
7. நீங்கள் முதல் தடவையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா? :-----.
8. முதற் தடவையாக இல்லாவிட்டால், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :-----.

   முழுப் பரீட்சைக்கும் ரூபா 115 ; ஒரு பாடத்திற்கு ரூபா 75 பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளருக்கு 2003-0-20-13 வருமான தலைப்பில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு நன்கு ஒட்டி விடுதல் வேண்டும்.

9. நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேற்போந்த 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையேன் என்றும் யான் உறுதி செய்கின்றேன்.

---:
பரீட்சார்த்தியின் கையொப்பம்

திகதி :-----.

குறிப்பு.-பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாகத் கையொப்பமிட அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

10. **கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**:

திரு./ திருமதி/ செல்வி .... எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர் என்றும், அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் 2003 ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆந் தேதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.

.....
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.

11. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

நான் -

(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும் ;

(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும்

சான்றுப்படுத்துகின்றேன்.

----------,

திணைக்களத தலைவரின் கையொப்பம்,
(பதவி முத்திரை பதியப்படல் வேண்டும்)

பெயர் : ----.
பதவிப் பெயர் : ----.
முகவரி :----.
4-613

முன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

தொழில்நுட்பவலர்ப் பயிற்சி நிறுவனம் (ரீ. ரீ. ஐ.) - கட்டுநாயக்கா

எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு (NDES)
எந்திரவியல் சிறப்புப் பயிலுநர்களை ஆட்சேர்த்தல் - 2003 குழு

கட்டுநாயக்கா தொழில்நுட்பவலர்ப் பயிற்சி நிறுவகத்தின் 2003 ஆம் ஆண்டுக் குழுவுக்காக மேற்கூறிய கற்கை நெறிக்கு எந்திரவியற் சிறப்புப் பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கு இலங்கை பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. **அனுமதிக்கான கல்வித் தகைமைகள்** .-கீழ்க்குறிப்பிட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர்:-

1.1 ஒரே அமர்வில் க. பொ. த. (சா.த) பரீட்சையில் குறைந்தது 3 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி ;

அத்துடன்

1.2(அ) க. பொ. த. (உயர் தர) (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே அமர்வில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களில் சித்தி;

அல்லது

(ஆ) க. பொ. த. (உயர் தர) (பழைய பாடத்திட்டம்) இல் இரு அமர்வுகளில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தி ;

அல்லது

(இ) க. பொ. த. (உயர் தர) (புதிய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசயானவியல் ஆகிய பாடங்களில் சித்தி.

2. **வயது**.- 2003 திசெம்பர் 01 ஆந் திகதியன்று 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களாயிருத்தல்.

3. **காலமும் பாடநெறியின் அட்டவணையும்**.-கீழே குறிப்பிட்ட வாறு, 73 வார ((அண்ணளவாக) போதனைத் திட்டத்தையும் 135 வார அண்ணளவாக) கைத்தொழில் பயிற்சியையும் கொண்ட நான்கு வருடத்துக்குரிய இரட்டைமுறை பாடநெறியாகும்:-

ரீ. ரீ. ஐ. இல் அடிப்படைப் போதனைத் திட்டம் (செறிவான ஆங்கிலம் உட்பட)	27 வாரங்கள்
கைத்தொழிலான அடிப்படைக் கைத்தொழில் பயிற்சி	39 வாரங்கள்
ரீ. ரீ. ஐ. இல் பொது போதனைத் திட்டம்	23 வாரங்கள்
கைத்தொழிலான பொது கைத்தொழில் திட்டம்	52 வாரங்கள்
ரீ. ரீ. ஐ. இல் சிறப்புப் போதனைத் திட்டம்	23 வாரங்கள்
கைத்தொழிலான சிறப்புக் கைத்தொழிற் பயிற்சி	44 வாரங்கள்

போதனைத் திட்டங்கள் தொழில்நுட்பவலர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கோட்பாடு போதனையையும் பாடநெறி வேலைப் பயிற்சியையும் உள்ளடக்கும்.

கைத்தொழில் பயிற்சித் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் தாபனங்களில் நடாத்தப்படுகின்றன.

4. இப்பாடநெறியின் கீழ் வழங்கப்படும் பிரதான கற்கைத் துறைக ளும் சிறப்புத் துறைகளும் கீழே தரப்பட்டுள்ளன :-

(அ) குடிசார் எந்திரவியல் .-	கட்டடமும் அமைப்பும் பெருந்தெருக்களும் புகையிரத பாதையும் நீரும் சுற்றாடலும்
(ஆ) மின்னெந்திரவியல்.-	மின்வலு இலத்திரனியல் தொலைத்தொடர்பு
(இ) பொறிமுறை எந்திரவியல்.-	பொறிமுறை பொதுமை தன்னசைவுள்ளவை * ஆழி

**(அ) ரீ. ரீ. ஐ. யின் ஆழி எந்திரவியற் பிரிவின் தரமுகாமைத்துவத் திட்டம், ஐஎஸ்ஓ 9002-1994 /ஈ என் ஐஎஸ்ஓ 9002-1994 இன் கட்டுப்பாட்டுக்கு அமைவான தாகும்.*

(ஆ) ஆழி எந்திரவியல் பாடநெறி தொடர்பாக நிறுவகமானது STCW, 95 இதன் திருத்தம், சருவதேச ஆழி அமைப்பின் (I.M.O) மாதிரி பாடநெறி 7.04 ஆகியன தொடர்பான இயக்க மட்டத்தில், ஆழி எந்திரவியலின் அறிவு விளங்குத்தன்மை, திறமை ஆகியவற்றுக்கான பணிப் புறுத்தும் கட்டுப்பாடுகளுக்கு அமைய, கல்வி போதனை யையும் கைத்தொழிற் பயிற்சி நிகழ்ச்சிமுறையினையையும் அளிப்பதில் ஈடுபட்டுள்ளது.

5. **போதனா மொழிமூலம்**.- ஆங்கிலம்

6. **தொழிற் பமிற்சிப்படி** .-சிறப்பு பயிலுநர்களுக்கு மாதாந்தப் படியாக ரூபா 600 செலுத்தப்படும். வருகை தராத நாட்களுக்கு ஏற்ற விதத்தில் கழிவுகள் ஏற்படுத்தப்படும்.

7. **தொழிற்பயில் நிலை ஒப்பந்தம் :**

7.1 பயிற்சித் தாபனத்திற்கும் பயிலுநருக்கும் இடையே பரஸ்பர கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும், பயிற்சியளிக்கும் தாபனத்துடனான ஒப்பந்தமொன்றுக்குள் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உட்படுத்தப் படுவார்.

7.2 பயிற்சி கால முடிவில் வேலைக்கான உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது.

7.3 பாடநெறியின் முதல் 6 மாத காலமும் தகுதிகூர் நிலைக்காலமாகக் கருதப்படும் . தகுதிகூர் நிலைக்காலத்தைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யத்தவறும் பயிலுநர்கள் விலக்கப்படுவர்.

8. **சான்றிதழ் வழங்கல்** .-பாடநெறியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்தோருக்கு எந்திரவியல் விஞ்ஞானத்திலான தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

9. **தெரிவுசெய்யும் பிரமாணங்கள் :**

9.1 பந்தி 1 இல் தரப்பட்டுள்ள மிகக்குறைந்த அனுமதித் தகைமைகளையும் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரையறையுமுடைய எல்லா விண்ணப்பதாரர்களும் தகுதியுடையோர் ஆவர். தெரிவுகள் கீழே தரப்பட்டுள்ள முறையில் நடைபெறும்.

9.2 விண்ணப்பதாரிகளுள் போதுமான தொகையினர் கல்வித்தகைமை அடிப்படையில் கணனி மூலம் முதலில் தெரிவுசெய்யப்படுவர்.

9.3 கணனி மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆங்கிலத்திலான உளச்சார்பு எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுமாறு கேட்கப்படுவர்.

9.4 விருப்பத் துறை சிறப்பாக்கம் மற்றும் உளச்சார்பு சோதனையில் சித்திநிலை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டத் துறைகளுக்கும் சிறப்பாக்கங்களுக்கும் விண்ணப்பதாரியை தெரிவு செய்வதற்கு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

10. **விண்ணப்பங்கள் :**

10.1 எல்லா விண்ணப்பங்களும் தொழில்நுட்பவலர் பயிற்சி நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களில் அமைந்திருத்தல் வேண்டும். வேறு படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10.2 விண்ணப்பப்படிவங்களை 2003.05.22 ஆந் திகதி வரை ரூபா 20 செலுத்தி கட்டுநாயக்க, டெம்பல் வீதியிலுள்ள தொழில் நுட்பவலர் பயிற்சி நிறுவனத்தின் பதிவாளரிடமிருந்தும் ; ரூபா 20 க்கான காசுக்கட்டளையை சுய முகவரியிட்ட முத்திரையுடனான 9"X4" அளவிலான கடித உறையுடன் "பதிவாளர் தொழிநுட்பவலர் பயிற்சி நிறுவகம், டெம்பல் வீதி, கட்டுநாயக்க" என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் தபாலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

10.3 மேலும் 2003.05.23 ஆந் திகதிவரை ரூபா 20 பணமாகச் செலுத்துவதன் மூலம் பின்வரும் அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்:-

(1) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, 971, ஜயவர்த்தனபுர மாவத்தை, வெலிக்கடை, இராஜகிரியா

(2) தொழிற்பயில்நிலைப் பயிற்சி நிறுவகம், இல. 581, காலி வீதி, கட்டுபெத்தை. மொறட்டுவை

(3) தன்னசைவுள்ள எந்திரவியல் பயிற்சி நிறுவகம், இல. 07, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, ஒறுகொடவத்தை, வெல்லம்பிட்டி

(4) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை- ஊவா மாகாணம், 288, குமரசிங்க மாவததை, பசறை வீதி, பதுளை.

(5) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை- சப்பிரகமுவ மாகாணம், புதிய கொழும்பு வீதி, கல்லூரிச் சாலை புதிய நகரம், இரத்தினபுரி

(6) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை- தென் மாகாணம், இல. 27A, திறந்த பல்கலைக்கழக வீதி, நூப்பே, மாத்தறை

(7) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை- மத்திய மாகாணம், 678, பேராதனை வீதி, முல்கம்பொலை, கண்டி

(8) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை - வட மத்திய மாகாணம், இரண்டாம் குறிச்சி, இல. 525/2, மைத்திரிபால சிறிசேன மாவத்தை, அநுராதபுரம்.

(9) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை - வட மேல் மாகாணம், (தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு அருகில்) நீர்கொழும்பு வீதி, மல்கடுவாவ, குருநாகல்.

(10) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை- வட மாகாணம், 07, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(11) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை- கிழக்கு மாகாணம், 161 A, யாசின் கட்டிடம், பிரதான வீதி, கல்முனை.

(12) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, மேல் மாகாணம், 242, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.

10.4 விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்துடன் முன்று கொடுப்புத் துண்டையும் மற்றும் இரண்டு பற்று துண்டையும் இணைத்து நாட்டின் யாதேனும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 125 செலுத்தல் வேண்டும்.

10.5 கொடுப்புத் துண்டு கீழ்வருவனவற்றைச் சரியாகச் சேர்த்து பூரணப்படுத்தப்படுதல் வேண்டும் :-

(1) *கிளைக் குறியீடும் கணக்கு இலக்கமும் : 0174 - 1010089204*

(2) *வரவு அறிவுறுத்தல்:* தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை நுகேகொடை மக்கள் வங்கியிலுள்ள *1010089204* இலக்க சேகரிப்புக் கணக்குக்கு வரவாக்குதலுக்கு

(3) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்.

10.6 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் கொடுப்புத்துண்டையும் வங்கியின் தகவுடைய அலுவலரால் கையொப்பமிட்ட கொடுப்புத் துண்டோடு இணைக்கப்பட்டப் படிவத்தையும் பதிவுத் தபாலில் "பணிப்பாளர்/அதிபர், தொழில் நுட்பவலர் பயிற்சி நிறுவனம், டெம்பல் வீதி, கட்டுநாயக்கா" என்னும் முகவரிக்கு *2003* யூன் *06* ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக அனுப்புதல் வேண்டும். தாமமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

10.7 அரசாங்க தொழிநுட்ப கல்லூரிகளில் டிப்ளோமா பாடநெறியினை அல்லது பட்டப்படிப்பினை முழு நேரமாக மேற்கொள்வோர் அல்லது மேற்கொண்டோர் விண்ணப்பிப்ப தற்கு தகுதியற்றவர் ஆவர்.

10.8 விண்ணப்பத்துடன் சான்றிதழ்களையோ அவற்றின் பிரதிகளையோ அனுப்பலாகாது.

10.9 விண்ணப்பத்தினைப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

10.10 மேற்படி பந்தி 10.2 தொடர்பான காசுக்கட்டளை "கணக்காளர் தொழில்நுட்பவல பயிற்சி நிறுவகம்" என்பவரின் பெயருக்கு கட்டுநாயக்கா அஞ்சலகத்தில் மாற்றக்கூடியதாய் எழுதப்படல் வேண்டும்.

11. அஞ்சலில் விண்ணப்பத்திற்கு ஏற்படக்கூடிய தாமதம் அல்லது தொலைந்து போதலுக்கு ரீ. ரீ. ஐ. எவ்வித ஆவனவோ பொறுப்போ ஏற்காது. எனவே, முன்கூட்டியே விண்ணப்பத்தை அஞ்சலிடவும்.

தலைவர்,
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
971, ஜயவர்த்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரியா.
4-676

காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

நில அளவை நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2003

நிலஅளவையாளர் நாயகத்தால் உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். இப்பரீடுசை இரண்டு பகுதிகளாக நடைபெறும் :

பகுதி I - ஆள் கூற்றுக் கணிப்பு
பகுதி II - படம் வரைதல்

2. முதலாவது பகுதிப் பரீட்சை 2003 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதியும் இரண்டாவது பகுதிப் பரீட்சை 2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 6 ஆம் 7ஆம் திகதிகளிலும் நடைபெறும். முதற் பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் இரண்டாவது பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். சான்றிதழ் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே பரீட்சையின் பகுதி I, பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :-

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்று தயார் செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூற்றைக் கணித்தல் ;

(ஆ) புலக் குறிப்பிலிருந்து ஒரு படத்தை பாகை மானி மூலமாகவும் ஆள் கூறு மூலமாகவும் சரியாகக் குறித்து பரப்பளவுகளைச் சரியாகக் கணித்தல்.

4. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்து ரூபா 300 கட்டணத்துடன் பதிவுத்தபால்மூலம் "நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை" என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இந்த அலுவலகத்திலிருந்து விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது. கட்டணம் முத்திரைகளாகவோ காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. காசுக்கட்டளைகள் "பணிப்பாளர், அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை" என்னும் பெயரில் எடுப்பதுடன், தியத்தலாவை தபால் அலுவலகத்தில் மாற்றப்படக்கூடிய தாக இருக்க வேண்டும். கட்டணம் பணம் மூலம் செலுத்துவதானால் "அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவையில்" செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றபட வேண்டும். காசுக்கட்டளையையோ பற்றுச்சீட்டையோ விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டாம்; விண்ணப்பத்துடன் இணைக்கவும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில அளவை நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2003" என எழுதப்பட வேண்டும்.

5. எக் காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

6. 2003 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள் ஆள் கூறு கணிக்கும் கணிதவாய்ப்பாடுகள் மற்றும் அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற் பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப் பொறிகள் (Non -Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

8. (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரை ஒவ்வொரு பாடத்திலும் பரீட்சிப்பதற்கு முன்பு, மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமாறு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க் கண்ட ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பித்தல் மூலம் நிரூபிக்கலாம்:-

(அ) ஆள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை.

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு முன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் நிழற்படத்தை கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச் சீட்டு.

(ii) பந்தி 8 (i) வேண்டப்பட்ட ஆளடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சிக்கப்படமாட்டார்.

9. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடாத்தப்படும்.

ரணசிங்க சில்வா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலம்,
த. பெ. இல. 506,
கொழும்பு 5.
2003.03.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை நில அளவைத் திணைக்களம்

நில அளவை நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2003

சுட்டிலக்கம்

(அலுவலக பாவனைக்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :(திரு./திருமதி/செல்வி) :--

(ii) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :-----.

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) (Mr./Mrs/Miss) :-----.

(ஆ) பால் (ஆண்/பெண்) :-----.

(இ) பதவி :-----.

(ஈ) தொழில் பார்குமிட முகவரி :-----.

(உ) நிரந்தர முகவரி :-----.

(ஊ) பிறந்த திகதி :-----.

(எ) சித்தியடைந்த உயர் பரீட்சையும் மொழிமூலமும் :-----.

(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி மூலம் :-----.

(ஐ) செலுத்திய கட்டணம் :-----.

(ஒ) காசுக் கட்டளை இலக்கம்/பற்றுச் சீட்டு இலக்கம் :-----.
வழங்கிய அலுவலகம் :----- திகதி :-----.

(தியத்தலாவ அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை அல்லது காசுக் கட்டளை மூலம் செலுத்தப்பட்டிருப்பின் அதன் மூலப் பிரதியை இணைக்கவும்)

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும் மற்றும் உண்மையானதென்றும் உறுதிமொழிகின்றேன்.

-----.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

4-691

பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

பொருட்கள் விற்பனவும் பிறவும்

மாவட்ட நீதிமன்றம், திருகோணமலை

பாவிக்கப்பட்ட ஓடுகள் விற்பனை

திருகோணமலை உவர்மலையில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் கூரையிலிருந்து அகற்றப்பட்ட ஆனால் மீண்டும் பாவிக்கக்கூடிய மூவாயிரம் (3000) ஓடுகள் 2003.05.10 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மாவட்ட நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் மேற்படி ஓடுகளைப் பார்வையிடலாம்.

மாவட்ட நீதிபதி,
மாவட்ட நீதிமன்றம்,
திருகோணமலை.

மாவட்ட நீதிமன்றம்,
திருகோணமலை.
2003.04.04.
4-724

அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு

பாவனைக்கு எடுக்கப்பட முடியாத உபகரணங்களையும், பொருள்களையும் ஏல விற்பனை செய்தல்

இங்கு பின் குறிப்பிடப்பட்டிருக்கும் உபகரணங்களை 2003.04.30 ஆந் திகதி கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் அமைந்திருக்கும் இவ் அமைச்சு அமைவிடத்தில் இவ் அமைச்சு அமைவித்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

விபரம்

அலுவலக உபகரணங்கள்	அளவு
(1) பதவி நிலை மற்றும் எழுதுநர் மேசைகள்	20
(2) பதவி நிலை மற்றும் சாதாரண கதிரைகள்	85
(3) கடிதக் கோவைத் தட்டங்கள்	44
(4) இரும்பு கெமினட்டுக்கள்	14
(5) இரும்பு அலுமாரிகள்	02
(6) தட்டெழுத்து இயந்திரங்கள் (சிங்களம் தமிழ் ஆங்கிலம்)	17
(7) செலயுலர் தொலைபேசிகள்	08
(8) தொலைபேசிகள்	07
(9) பெக்ஸ் இயந்திரங்கள்	03
(10) டிஜிட்டல் படியெடுப்பு இயந்திரங்கள்	01
(11) ரோனியோ இயந்திரங்கள்	06
(12) நேரப்பதிவு இயந்திரங்கள்	04
(13) படப்பிடிப்பு இயந்திரங்கள்	14
(14) ப்ரீப்கேஸ்கள்	05
(15) கணனிகள்	05
(16) கணனித் திரைகள்	12
(17) கணனி அச்சுப் பொறிகள்	08
(18) யு. பி. எஸ்.	05
(19) லெப்டொப் கணனி	03
(20) ஸ்டொப் லயாசர்	02
மின் உதிரிப்பாகங்கள் வீட்டு உபகரணங்கள்	
(1) மின் கேத்தல்கள்	23
(2) தேனீர் போச்சிகள்	02
(3) ஜொக்குகள்	23
(4) மின்பொயிலர்கள்	02
(5) நீர்வடிகள் (பில்டர்கள்)	05
(6) தட்டுக்கள் (இரும்பு மற்றும் பிளாஸ்டிக்)	05
(7) கடிகாரங்கள்	07
(8) குளிரூட்டும் இயந்திரங்கள்	09
(9) மின்விசிறிகள்	23
வீடியோ உபகரணங்கள்	
(1) வீடியோ க்ராபாக் ப்பிராக்	01
(2) வீடியோ ரெகோடர்	01
(3) வீடியோ பிரோ ஜெக்டர்	01
(4) டேப் ட்ரய்ங்	01

கட்டிடப் பொருட்கள்

பாவனையிலிருந்து நீக்கப்பட்ட வளைகள், கைமரங்கள், அருளுவளைகள், யன்னல்கள், பேன்றி கபட்டுக்கள், எஸ்லோன் மழைப்பீலிகள், கதவுகள், மின்தூக்குகள், பாதுகாப்பு கதவுகள், ஜீஅய் குழாய்கள், அலுமினியம் ஒதுக்கப்பட்ட உபகரணங்கள், (பாகங்கள்) ஒதுக்கப்பட்ட உபகரணங்கள், (பாகங்கள்), யன்னல் பிரேம்கள், துப்பரவேற்பு உபகரணங்கள், மொட் சீட் கவர்கள், மலசலகூட கண்ணாடிகள், சிட்சன்.

மின் உபகரணங்கள்

மின் சுவிச்சுகள், மெயின் சுவிச்சுகள், பிராத் தெரியுலேட்டர், ட்ரிப் சுவிட் பிலக் போஸ், சிவிலின் ரோஸ், சின்க் பொக்ஸ் மற்றும் வயர்கள்.

டயர்களும் டியுப்புகளும்

உபயோகிக்கப்பட்ட டயர்கள் பெருந்தொகை

ஏல விற்பனை 2003.04.30 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகும். விற்பனைக்கு உத்தேசித்துள்ள பொருள்களை 2003.04.29 ஆந் திகதி வரை அலுவலக நேரத்தினுள் அமைச்சு அமைவிடத்தில் பார்வையிட முடியும்.

விலையை தீர்மானித்தவுடன் உடனடியாக கொள்வனவு செய்பவரினால் அப்பொருட்களின் மொத்த பெறுமதியை பணமாக செலுத்த வேண்டியதுடன் கொள்வனவு செய்த பொருட்களை அன்றைய தினம் பி. ப. 6.00 மணிக்கு முதல் அமைச்சு வளாகத்தினுள் இருந்து எடுக்கப்படுதல் வேண்டும்.

பொருட்களை பார்வையிடுவதற்கு கொள்வனவு செய்வதற்கு வருபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆள் அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும்.

ஏல விற்பனையின் அலுவல்கள் தொடர்பிலான இறுதி தீர்மானம் அமைச்சு செயலாளரை கொண்டதாக இருக்கும்.

செயலாளர்,
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ
மறுசீரமைப்பு அமைச்சு.

அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.
4-773

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

அட்டர்னி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில், எத்துல் கோட்டே, ஜயவீர மாவத்தையில், இலக்கம் 26/11 இல் வசிக்கும் புளத்சிங்கள சுமதிபால மற்றும் டெய்ஸி புளத்சிங்கள ஆகிய நாமிருவரும், கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் டி. ஜி. வில்சன் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001 ஆம் ஆண்டு மார்சு மாதம் 06 ஆம் திகதியிட்ட 173 ஆம் இலக்கம் கொண்டதும் திரு. கமகே தயாநந்தவுக்கு வழங்கப்பட்டதுமான அட்டோர்னி அதிகாரத்தை இப்போது இரத்து செய்கிறோம். இதன் பின்பு, திரு. கமகே தயாநந்தவுடன் எமது பெயரில் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுமாயின் அதற்கு நாம் பொறுப்பில்லை என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

பி. சுமதிபால,
டி. புளத்சிங்கள,

2003 ஆம் ஆண்டு மார்சு மாதம் 15 ஆந் திகதி.
4-603

அட்டர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொடை, கேர்டன் பாடசாலை வீதி, இல. 5/2, இல் வசிக்கும் ருக்மனி டீ அல்விஸ் ஆகிய நான், நுகேகொடை கேர்டன் பாடசாலை வீதி இலக்கம் 5/2 இல் வசிக்கும் திரு. நாயக்கரத்ன முதியன்சேலாகே ப்ரியா ரஞ்ஜன் ஸ்ரீ பண்டார நாயக்கரத்ன என்பவருக்கு, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. டீ. எஸ். பீ. பி. மதப்புலியினால், 2000 ஒகத்து 8 என ஆந் திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட இல. 241 கொண்ட அட்டர்னி தத்துவத்தினை இரத்து செய்வதென இலங்கை அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவித்துக்கொள்கிறேன். ஆகவே மேற்படி திகதி முதல் மேற்கூறப்பட்ட அட்டர்னி தத்துவம் செயலிழந்துள்ளதெனவும் அறிவித்துக்கொள்கிறேன்.

ருக்மனி டீ அல்விஸ்.
4-711

ஏல விற்பனைகள்

செலான் வங்கி லிமிட்டட் - (கொக்கல கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட விதிகள்) சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

சகல பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டுகள் மத்திடியகஹாவத்தை என அழைக்கப்படும் அனுமதி பெற்ற நில அளவையாளர் எஸ். ஏ. குணவர்த்தன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984.01.20 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 325 இல் லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணி.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரலே பல்லேபத்து பொரலெஸ்கமுவயில் அமைந்த எகொடவத்தை வீதி இல. 150/1 இலக்கமிடப்பட்ட (காணி விஸ்தீரணம் 20.25 பேர்ச்) செலான் வங்கி லிமிட்டெட் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்படி சொத்தை 2003, மே 13 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு இதேயிடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொரலஸ்கமுவ லேக் வீதி, இல. 57/ஏ இல் அமைந்த, 2689/W/J எனும் வியாபாரப் பதிவைக் கொண்ட "கீன்ஸ் ட்ரேடர்ஸ்" இன் ஏக உரிமையாளரான மினுவன்பிட்டியகே சுவர்ணலதா பீரிஸ் மற்றும் கடமைப்பட்டவரான இல. 57, லேக் வீதி, பொரலஸ்கமுவவில் ஹெட்டிஆராச்சிகே சமன் பின்டோ ஜயவர்த்தன என்பவர்கள் பகிரங்க நொத்தாரிசு டீ. எம். சுவாமிநாதன் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 1998.09.29 ஆந் திகதியிடப்பட்ட முறி இலக்கம் 4441 இன் பேரில் நிலுவையாகவுள்ள கட்டணங்களைச் செலுத்தத் தவறியுள்ளார்.

தீர்மான அறிவித்தலுக்காக 21.09.2001 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி 04.09.2001 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்", "தினமின" புதினப் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கட்டணம் செலுத்தும் முறை.-

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்);

(2) விற்பனை திகதியிலிருந்து 30 வேலைநாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்);

(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்);

(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்);

(5) ரூபா 28,290 ஐ விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்);

(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500;

(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 2,000.

உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொழும்பு 03, இல. 90, சிலிங்கோ செலான் டவர்ஸ், 12, ஆம் மாடி, செலான் வங்கி லிமிட்டெட், (சட்ட பிரிவு) உதவிப் பொதுமுகாமையாளரிடமிருந்து பெறலாம். பார்வையிடலாம்.

தொலைபேசி இல. 074-701256,074-701273.

டன்ஸ்டன் அன்ட் டல்லாஸ் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளர்கள் தரகர்கள்,
நிபுணத்துவ ஏலதாரர்,
மதிப்பீட்டாளர் மற்றும் ஆதன முகவர்கள்.

381 1/1, காலி வீதி,
கொழும்பு 4,
தொலைபேசி : 591167
தொலைபேசி/பெக்ஸ் : 584874, 500838
ஹொட்லைன் : 0722-50422
4-713

இ. அ. நி. கூ. வங்கி

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

1 ஆவது விற்பனை :

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் ஹிரிபிட்டிய என்ற இடத்தில் அமைந்துள்ள கெட்டக்குலாவ கோன்கஹமுலவத்த எனப்படும கெட்டக்குலாவவத்த மற்றும் கெட்டக்குலாவ கும்புற என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட அனுமதி பெற்ற நில அளவையாளர் சீ. எஸ். பெரேராவினால் 1978.01.22 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 654 இல் லொட் 2 என குறிப்பிடப்பட்டுள்ள காணியின் எல்லாம் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டுகள் (காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 13பேர்ச்சஸ்)

(மேற்குறிப்பிடப்பட்ட லொட் 2 தற்பொழுது அனுமதிபெற்ற நிலஅளவையாளர் செனரத் விஜேரத்னவினால் 1995.02.10 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1777 இல் லொட் ஏ என குறிப்பிடப்பட்டுள்ளது.)

அங்கு காணப்படும் கட்டிடங்கள் மற்றும் சகலவற்றுடன் ஏலவிற்பனை

('ஹிரியாலரைஸ் மில்' என்ற வடிவில் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் முதியன்னெஹெலகெதர செய்யித் மொஹமட் மற்றும் மொஹமட் தௌபீக் மொஹமட் ராஃபி ஆகியோரினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

இ. அ. நி. கூ. வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2003, மே 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்கிறோம்.

இயந்திரத் தொகுதி மற்றும் இயந்திராதி விபரம்

01 தொகுதி 15 எச். பி. மோட்டாருடன் ட்ரையர்
04 7.5 எச். பி. மோட்டாருடன் இறப்பர் ரோலர் ஹல்லர்
02 25 எச். பி மோட்டாருடன் பொலிஷர்
01 15 எச். பி. மோட்டாருடன் சீன தயாரிப்பு செபரேட்டர்
04 ஸ்ரீமர்கள்
01 பொய்லர்
01 25 எச். பி. மோட்டாருடன் சீன தயாரிப்பு ஹல்லர்
02 5 எச். பி. மோட்டாருடன் ஃபேன்
01 5 எச். பி. மோட்டாருடன் டீ. ஸ்டோனர்

2 ஆவது விற்பனை :

அதே தினம் பி. ப. 1.00 மணிக்கு பின்வரும் சொத்தினைப் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்கிறோம் :-

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் மஹகல்பொட மீகொட கோரளையின் வேஉட வில்லி ஹத்பத்துவின் ஹதிரவலான என்றழைக்கப்படும் திவுல்கஹமுலவத்தவின் அனுமதி பெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். ஹேரத்தினால் 1992.02.08 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 3179 இல் லொட் 2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லாம் பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள். (காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 31.5பேர்ச்சஸ்)

அங்கு காணப்படும் கட்டிடங்கள் மற்றும் சகலவற்றுடன் ஏலவிற்பனை

கட்டணம் செலுத்தும் முறை.- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10%;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி ;
(3) ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) ரூ. 20,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவில் 50%;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கு நொத்தாரிசு கட்டணம் ரூபா 2000.

சட்டரீதியான விதிப்பனவுகள் தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையில் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 1999.04.16 ஆந் திகதி அரசாங்க வர்த்தமானியையும மற்றும் 1999.04.01 ஆந் திகதி "டெய்லி நியூஸ்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

மேலதிக விபரங்களுக்கு.-இ. அ. நி.கூ. வங்கியின் சட்டப்பிரிவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 440366.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையின் கீர்த்திபெற்ற பட்டய ஏலதாரர்
மற்றும் ஆலோசக மதிப்பீட்டாளர்.

தலைமை அலுவலகம்	நகர அலுவலகம்
24, டொரிங்டன் வீதி, கண்டி,	55ஏ. தர்மபால மாவத்தை, கொழும்பு 3.
தொலைபேசி இல. :08-224371, 08-227593	தொலைபேசி இல. : 01-448526, 441761
பெக்ஸ் இல. : 08-224371	பெக்ஸ் இல. : 01-448526, 575214
ஈமெயில் : samera@diamond.lanka.net	ஈமெயில் : samera@srilanka.net

4-732

இ. அ. நி. கூ. வங்கி

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வேஉட வில்லி ஹத்பத்துவின் மாதுரு கோரளையில மல்மீவல என்னுமிடத்தில் அமைந்துள்ள வித்தியகே பானகே பிட்டியவத்த என்றழைக்கப்படும் எல்லாக் காணியும், மேற்கூறப்பட்ட காணித்துண்டு தற்பொழுது லொட 3 என குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் நாகஹமுலவத்த என்றழைக்கப்படும் காணி (அனுமதி பெற்ற நில அளவையாளர் டபிள்யு. சீ. எஸ். எம். அபேசேக்கரவினால் 1990.02.26 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல.47/90 இல் லொட் 5 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.)

காணியின் விஸ்தீரணம் : லொட் 03ஏ. 2றூ. 25பேர்.
லொட் 50ஏ. 1றூ. 21பே.)

குருநாகல் காணிப்பதிவகத்தில் பதிவுப் புத்தகத்தில் பக்கம் ஏ 1283/38 இல் பதியப்பட்டுள்ள காணி மற்றும் சகலவற்றுடன் ஏலவிற்பனை

(*அதுராதபுரம் வீதி, கல்கமுவவில் ஏக உரிமையாளராக "சல்மல்" என்ற பெயர் வடிவில் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் ஸ்ரீ நாராயண ரத்னயக்க ஹேரத் முதியன்சேலாகே சுனேத்ரா ஜயந்தி குமாரி மல்மீவல என்பவரினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து).*

இ. அ. நி. கூ. வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட அதகாரத்தின் கீழ் 2003, மே 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்கிறோம்.

கட்டணம் செலுத்தும் முறை.- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில்பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10%;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி ;
(3) ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) ரூ. 16,400 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவில் 50%;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கு நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

சட்டரீதியான விதிப்பனவுகள் தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு.-இ. அ. நி.கூ. வங்கியின் சட்டப்பிரிவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 440366.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
இலங்கையின் கீர்த்திபெற்ற பட்டய ஏலதாரர்,
மற்றும் ஆலோசக மதிப்பீட்டாளர்.

தலைமை அலுவலகம் :	*நகர அலுவலகம் :*
24, டொரிங்டன் வீதி, கண்டி,	*55ஏ. தர்மபால மாவத்தை, கொழும்பு 3.*
தொலைபேசி இல. :08-224371, 08-227593	தொலைபேசி இல. : 01-448526, 441761
பெக்ஸ் இல. : 08-223471	பெக்ஸ் இல. : 01-448526, 575214
ஈமெயில் : samera@diamond.lanka.net	ஈமெயில் : samera@srilanka.net

4-733

மக்கள் வங்கி - பேராதெனிய கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

அனுராதபுரம் விமான நிலைய பாதையில் நிதஹஸ் மாவத்தை, இராணுவ நலன்புரி வியாபார ஸ்தலத்திற்கு அருகில் இலக்கம் 600/54 எனும் இடத்தில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடம் ஏலவிற்பனை

மக்கள் வங்கியினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் எம்மால் ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் 09.05.2003 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

ஆதனத்தின் விவரணம்.-வடமத்திய மாகாணத்தில், அநுராதபுரம் நுவரகம் பலாத்த கிழக்கும் பிரதேச ஆதாயம் பிரிவிற்கு சொந்தமான கனதரா கோரளை சிறு தம்மொன்னாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள அளவையாளரால் தயார் செய்து அவர் பொறுப்பில் வைத்திருக்கும்2 ஆம் இறுதி 246 கிராமம் எனும் வரைபடத்தில் 9 ஆவது காணித்துண்டு வரையுள்ள 0.2246 ஹெக்டேயார் பரப்பளவான காணி.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-05.11.1999 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 04.09.2002 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

ஆதனத்தை வந்தடைதல்.-அநுராதபுரம்-விமான நிலையப் பாதையில் பிரயாணம் செய்து இராணுவ பாதை தடைக்கு அண்மையில் இடது பக்கமாகவுள்ள நவ நுவர பாதையில் சுமார் 100 யார் சென்று இராணுவ நலன்புரி வியாபார ஸ்தலத்திற்கு அருகில் வலது பக்கமாகவுள்ள மணற்பாதையில் சுமார் 50 யார் தூரம் சென்றால் இடது பக்கமாக இலக்கம் 600/54 ஐக் கொண்ட இடத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

கொடுப்பனவு செய்யும் முறை.- விற்பனை இறுதியில் வெற்றிகரமான வாங்கியவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவு ரொக்கப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்:-

(1) வாங்கிய விலையில் 10%;
(2) பிரதேச சபை வரி கட்டணம் 1% ;
(3) ஏல விற்பனையாளரின் கமிஷன் கட்டணமாக விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;
(5) விற்பனை செலவு மற்றும் கட்டணங்கள் இருப்பின் அவையும்.

வாங்கிய விலையில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி- கண்டி பிரதேச முகாமையாளர் இடம் செலுத்தப்படுதல் வேண்டும். தொலைபேசி இல. : 08-234283 ஃபெக்ஸ் இலக்கம் : 08-223017

ஆதனம் மற்றும் விபரங்கள் மேலுள்ள விலாசத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

மேற்கூறியபடி குறித்த கட்டணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போது செலுத்தப்பட்ட விற்பனை விலையில் 10% பணத்தொகை மீளச் செலுத்தப்பட மாட்டாது. அத்துடன் மீண்டும் அதே ஆதனம் விற்பனை செய்யப்படுவதற்கான உரிமை வங்கிக்கு உண்டு.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கை முன்னனி உரிமை பெற்ற
ஏலவிற்பனையாளர்கள் (அரசாங்க மற்றும் தனியார் வங்கியாளர்களுக்கான) மற்றும் நீதிமன்ற ஆணையாளர்கள்).

தலைமை அலுவலகம் :	*நகர அலுவலகம் :*
24, டொரிங்டன் வீதி, கண்டி,	*55ஏ. தர்மபால மாவத்தை, கொழும்பு 3.*
தொலைபேசி இல. :08-224371, 08-27593	தொலைபேசி இல. : 01-448526, 575214
பெக்ஸ் இல. : 08-223471	பெக்ஸ் இல. : 01-448526, 575214
ஈமெயில் : samera@diamond.lanka.net	ஈமெயில் : samera@srilanka.net

4-739

ருஹுணு அபிவிருத்தி வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ருஹுணு அபிவிருத்தி வங்கி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

மேற்படி தீர்மானத்தின் கீழ் என்மீது வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய கீழே விபரிக்கப்பட்ட அட்டவணையில் சொத்தையும் நிலமனையும் 2003, மே மாதம் 9 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

அட்டவணை

தென் மாகாணத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வட கிருவா பத்துவையில் வலஸ்முல்லையில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். கே. கியதாஸ அவர்கள் தயாரித்த 1976.12.25 ஆந் திகதியிட்ட இலக்கம் 607 காணியில் மேற்படி தீர்மானத்தின் கீழ் என்மீது வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய குறிப்பிட்டுள்ள போகஹ ஹேன எஸ்டேட் எனும் பிரித்து வேறாக்கப்பட்ட ஏ 25, ஏ 26 ஒருமித்த துண்டுகளில் அமைந்துள்ள (0ஏ. 1றூ. 0பே.) விசாலமுடைய காணியும் அதன்கண் சகல பயிர்களும் அதில் அமைந்துள்ள கட்டடங்களும் எனைய சகலதும் ஆகும்.

2001.09.07 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும், 2002.06.26 ஆந் திகதிய, "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" பத்திரிகைகளிலும் ஏல விற்பனை வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு கவனத்தை செலுத்தவும்.

காணிக்கு செல்லும் வழி.-வலஸ்முல்லையில் இருந்து பல்லேகந்த வீதியில் 200 மீற்றர் தூரத்தில் பிரதான வீதிக்கு இடது புறத்தில் இக்காணி அமைந்துள்ளது.

கொடுப்பளவு செய்யும்விதம்.-ஏல விற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களை காசாக செல்லுதல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூர் அதிகாரசபைக்கு கட்ட வேண்டிய கட்டணமாக வாங்கும் விலையில் 1% ;
(3) ஏல விற்பனையாளரின் தரகுப் பணமாக வாங்கும் விலையில் 2 1/2%;
(4) விற்கும் விலையும் விற்பனைச் செலவும், வேறு செலவுகளிருப்பின் அந்தப் பணமும் வாங்கும் விலையில் மீதியான 90% பணமும் ஏலவிற்பனை திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பபுரன அநகாரிக்க தர்மபால மாவத்தையில் இலக்கம் 382ஏ ருஹுணு அபிவிருத்தி வங்கியின் தலைமை அலுவலகத்தில் முகாமையாளர் செலுத்த வேண்டும். தொலைபேசி இல.: 041-28208, 041-26209.

உரித்து ஒப்பினையும் அது சம்பந்தப்பட்ட தகவல்களும் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் படி மீதிப்பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாவிடின் தற்போது பெற்றுள்ள கொள்வனவு விலையில் 10% பணத்தை மீளச் செலுத்தாது மீண்டும் அச்சொத்தை விற்பதற்கு வங்கிக்கு அதிகாரம் உண்டு.

எம்.எச். பத்மானந்த சிரிசேன,
உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளரும்,
மதிப்பீட்டாளரும், நீதிமன்ற அதிகார ஆணையாளர்.
இல. 39, வில்பிரட் குணசேன மாவத்தை,
கொடுவை.
மாத்தறை,
தொலைபேசி இல. : 041-22021
ஈ-மெயில் : survmhps@sltnet.lk

4-760

இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களின் கீழ் விற்பனை அறிவித்தல்

சொத்து, நிலமனை ஏலவிற்பனை

கடன் தொடர்பு இல.: 86/95

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2003.01.16 ஆம் திகதிய 1272 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2003.01.10 ஆந் திகதிய 'டெய்லி நியூஸ்', 'தினமின', 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும், விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும்பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 251 டயிக் வீதி, திருகோணமலை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எஸ். சிவஞானசேகரம் 2003.06.05 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அட்டவணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனைப் பற்றுவில், காத்தான்குடி பிரதேச சபை எல்லைகளுள் காத்தான்குடியில் அமைந்துள்ள I"வேம்புவளவு" என அழைக்கப் படும் காணியின் தெற்குப் பாகம் - வடக்கில் : இக்காணியின் மீதியும் ; கிழக்கில் : சின்னப்பிள்ளையின் காணியும் ; தெற்கில் : றோட்டும் ; மேற்கில் : அலியார் லெப்பை மற்றும் அபூபக்கர் லெப்பை ஆகியோருக்குச் சொந்தமான காணியும் எல்லைகளாகக் கொண்டு வடக்கிலிருந்து தெற்குக்கு (7 1/2 x 6) நாற்பத்தைந்து அடிகளும், கிழக்கிலிருந்து மேற்குக்கு ஆறேமுக்கால் (6 3/4) பேத்தம்களும் விஸ்தீரணமுடையதாகும். அத்துடன் அங்கு அடங்குபவையின் சகல உரிமைகளும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணி புதிய வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது :-

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப் பற்றுவில், காத்தான்குடி பிரதேச சபை எல்லைகளுள் காத்தான்குடியில் அமைந்துள்ள "வேம்புவளவு" என அழைக்கப்படும் காணியின் காணித்துண்டு - வடக்கில் : சின்னப்பிள்ளை உம்மாவின்

தோட்டமும் ; கிழக்கில் :ஹாஜா மொஹய்தீனின் தோட்டமும் ; தெற்கில் : எல்லை றோட்டும் ; மேற்கில் : அலியார் மஜீதின் தோட்டமும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராயர் தயாரித்த 1995.02.22 திகதியிட்ட வரைபடம் இல. ஏஎஸ்/ 95/ 1175 இல் விபரித்த ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 6பே.) விஸ்தீரணமுடையதாகும். அத்துடன் அங்கு அமைந்துள்ள கட்டிடங்களும் கிணறு மற்றும் அங்கு அடங்கியுள்ள சகலவற்றினதும் உரிமையும் ஆகும். இது மட்டக்களப்பு காணிப்பதிவகத்தில் தொகுதி பி 498 பக்கம் 196 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பி. சிவஞானம்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
காத்தான்குடி.
4-762

இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களின் கீழ் விற்பனை அறிவித்தல்

சொத்து நிலமனைகள் ஏலவிற்பனை

கடன் தொடர்பு இல.: 40/96

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய 2003.01.16 ஆம் திகதிய 1272 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2003.01.10 ஆந் திகதிய 'டெய்லி நியூஸ்', 'தினமின', 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும், விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப் பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும்பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 251 டயிக் வீதி, திருகோணமலை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எஸ். சிவஞானசேகரம் 2003.06.05 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அட்டவணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப் பற்றுவில், காத்தான்குடியில் அமைந்துள்ள "வேம்புமேட்டுப் பூமி" என அழைக்கப்படும் காணியின் கிழக்குப் பாகத்தின் வடக்குத் துண்டு - வடக்கில் : பொது ஒழுங்கையும் ; கிழக்கில் : ஒழுங்கையும் ; தெற்கில் : ஜெஹரா உம்மாவுக்குச் சொந்தமான தோட்டமும் ; மேற்கில் : செய்னம்புவுக்குச் சொந்தமான தோட்டமும் எல்லைகளாகக் கொண்டு வடக்கிலிருந்து தெற்குக்கு ஆறு (6) பேத்தம்களும் அதாவது முப்பத்தொன்பது அடிகளும், கிழக்கிலிருந்து மேற்குக்கு ஏழரை பேத்தங்களும் (7 1/2) அதாவது முப்பத்தொன்பது அடிகளும் விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் வீடு, கிணறு, தென்னை மரங்கள் மற்றும் அங்கு அடங்கும் பயிர்கள் மற்றும் உற்பத்திகளும் ஆகும். இது மட்டக்களப்பு காணிப்பதிவகத்தில் தொகுதி பி 235/ 167 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட உத்தவுபெற்ற நிலஅளவையாளர் சி. பத்மநாதன் தயாரித்த 1989, மார்ச்சு 27 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 83/ 89 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

